**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**13/2013

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 08 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 08.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தராஜ் | ஜாதி | : | |
| த /பெயர் | : | ரெங்கராஜன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

**பி.சா.1 முன்னிலை வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கை தாக்கல் செய்த வாதி எனது சித்தப்பா ஆவார். வாதியும் எனது தகப்பனாரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு எந்த சர்வே எண்ணிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 3721 வார்டு நம்பர் 1 பிளாக் நம்பர் 58 ஆகும். 39050 சதுரடி மட்டும் டவுன் சர்வே எண்.3721 ல் வாதிக்கு உள்ளது. அதில் ஒரு திருமண மண்டபம் உள்ளது என்றால் சரிதான். அந்த திருமண மண்டபம் யாருக்கு சொந்தமானது என்றால் வாதிக்கு சொந்தமானது. வாதியின் மனைவியும் மருத்துவர் தான். அவர் பெயர் தையல்நாயகி. திருமண மண்டபம் மருத்துவர் தையல்நாயகிக்கு சொந்தமானது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

2) மருத்துவர் தையல்நாயகிக்கு சொந்மான இடத்தில் தான் திருமண மண்டபம் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. எந்ததெந்த தேதியல் செட்டில்மெண்ட் செய்யப்பட்டது என்றால் 1998 ஆம் வருடத்தில் இருக்கலாம். வாதி தாவா சொத்திற்கு முன்னதாக அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி அவரது மனைவிக்கு 1983 ல் 2112/1983 என்ற ஆவணமாக செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அதன் பிற்பாடு ஆவண எண்.2001/1986 ல் 2160 சதுரடியை வாதி அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

3) அதற்கு பின்னிட்டு ஆவண எண்.2002/1986 சுமார் 5000 சதுரடியை வாதி அவரது மனைக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட 3 செட்டில்மெண்ட் ஆவணத்தில் அடிப்படையில் வாதியின் மனைவி தையல்நாயகிக்கு கிடைத்த இடத்தில் தான் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) திருமண மண்டபத்திற்கு தெற்கில் தான் தாவா சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது தந்தையாருக்கும், வாதிக்கும் சுமூகமாக உறவு நிலை என்று சொன்னால் சரிதான். வாதி மற்றும் வாதியின் மனைவி இருவரும் மருத்துவர்கள் என்பதால் அவர்கள் நல்ல நிலையில் இருந்தார்கள் என்றால் சரிதான். வாதியால் எனக்கும் என் சகோதரர், தந்தையார், மற்றும் தாயார் ஆகியோர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் எனக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு தான் இந்த வழக்கு என்றால் சரிதான்.

5) என் தகப்பனார், தாயாருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு எண் குறித்து தெரியாது. ஆனால் வழக்கு நடந்து வருவது குறித்து தெரியும். வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கு தாக்கல் ஆவதற்கு முன்னதாக எனக்கும் வாதிக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். கடந்த 1995-1996 ல் பத்திர பதிவு செய்யும்போது பிரச்சனை ஏற்பட்டது.

6) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் உள்ள கையொப்பம் வாதி தங்கமணியின் கையொப்பம் அல்ல என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். வாதி அவரது பெயருக்கு முன்னதாக S.R.V. என்ற மாற்றம் செய்தற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞர் மூலமாக தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை.

7) வாதி தரப்பில் என்னனென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தும், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்தும், தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்திலுள்ள கையொப்பம் வாதி தங்கமணி அவருடையது தான் என்பது குறித்து கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். கைரேகை அனுப்புவது குறித்து நான் ஏதேனும் நடவடிக்கை

எடுத்தேனா என்றால் இல்லை. மேற்கண்ட நடவடிக்கையை வாதி தான் எடுக்கவேண்டும்.

8) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.சா.ஆ.1 ஒப்பந்த ஆவணம் எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் கடந்த 20.12.1995 ல் ஏற்பட்டது. அந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த ஆவணத்தில் என்ன விவரங்கள் இருந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும். மேற்கண்ட பி.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் எனது அப்பா 17,70,000/- ரூபாய் வாதியிடம் கொடுத்தார். அதை அடித்து திருத்தி 17,23,000/- என்று குறிப்பிட்டு, அதில் வாதியும் அவரது மனைவியும் கையொப்பம் செய்துள்ளனர்.

9) பி.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையொப்பம் வாதி மற்றும் அவரது மனைவி தையல்நாயகியுடையது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி அடித்தி திருத்தியது நாங்கள் தான் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 முழுவதும் கையால் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 20000 சதுரடி என குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கெல்லையாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வாதி கட்டிடத்திற்கு தெற்கு, மணவழகன் மனைக்கு கிழக்கு, வீரா கணேசன் மனைக்கு வடக்கு, ரோட்டிற்கு மேற்காகும்.

10) திருமண மண்டபம் வாதியின் மனைவி தையல்நாயகிக்கு சொந்தமானது என்றாலும், வாதிக்கு சொந்தமானதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் சரியாக சொத்து விவரங்களும், நான்கெல்லையும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தங்கமணி சென்னையில் தான் இருக்கிறார் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் சென்னையிலும், இங்கேயும் இருக்கிறார் என்று கூறுகிறார்.

11) வாதி மகன் ஆஸ்திரேலியாவிலும், முதல் மகள் சிங்கப்பூரிலும், 2 வது மகள் பெங்களூரிலும் இருந்து வருகிறார். வாதி தங்கமணி வெளிநாட்டில் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த திருமண மண்டபத்திற்கு பெயர் தான் வாதி தங்கமணி பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதன் அடிமனையும் கட்டிடமும் வாதியின் மனைவி தையல்நாயகிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து கிரைய உடன்படிக்கையில் விலையும், விஸ்தீரணமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரைய

உடன்படிக்கை என்றால் ஒரு நபர் ஒன்றை கொடுக்க தயாராக இருக்கும்போது மற்றொரு நபர் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் சரிதான்.

12) ஒரு நபர் ஒரு இடத்தை ஒரு குறிப்பிட்ட விலைக்கு விற்பதாக சொல்லும்போது, அதை மற்றொரு நபர் ஏற்றுக்கொள்ளும்போது தான் உடன்படிக்கை ஏற்படும் என்றால் சரிதான். இந்த பி.சா.ஆ.1 உடனபடிக்கையில் சந்தை விலைக்கு நிர்யணம் செய்துக்கொள்ளுவது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சந்தை விலை குறிப்பிடாமல் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்திற்குண்டான அசல் பத்திரம் தொழில் முதலீட்டு கழககத்தில் அடமானம் வைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாதி தான் குறிப்பிட்டார். ஒரு சொத்தின் அசல் பத்திரம் தொழில் முதலீட்டு கழகத்தில் அடமானம் வைக்கப்பட்டிருக்கும்போது அந்த அசல் ஆவணம் மீட்கப்படும் வரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்யமாட்டார்கள் என்றால்? சரியல்ல.

13) நான் சொல்வதுபோல் மருத்துவர் தங்கமணி மற்றும் அவரது மனைவியான தையல்நாயகி கையொப்பமும் இல்லை என்றால் சரியல்ல. நான் அவர்களது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இந்த ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தின் முத்திரை தாள் எந்த தேதியில் யாரிடம் வாங்கப்பட்டது என்றால் முதலியார் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது. அவரது பெயர் என்னவென்று தெரியாது. யார், யார் பெயரில் இந்த முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் ரெங்கராஜன், கோவிந்தராஜன் மற்றும் முருகராஜன் ஆகியோர்கள் பெயரில் வாங்கப்பட்டது. எத்தனை முத்திரை தாளில் எழுதப்பட்டது என்றால் 3 முத்திரை தாள்களில் எழுதப்பட்டது. எத்தனை ரூ.முத்திரை தாள் என்றால் 10 ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டது.

14) சாட்சிகள் யார், யார் என்றால் சீனிவாச தஞ்சராயர், ரெங்கசாமி தஞ்சராயர், ஏ.எஸ் ஜெயராமன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்தார். அவர்கள் யார் என்றால் என் அப்பாவிற்கு சித்தப்பா ஆவார்கள். எனக்கு தாத்தா ஆவார்கள். ஜெயராமன் மட்டும் சித்தப்பா ஆவார். ஜெயராமன் சீனிவாச தஞ்சராயரின் மகன் ஆவார். அவர்கள் ஆண்டாங்கரை கிராமத்தில் வசித்து வருகிறார்கள். ஒரு நபர் சாட்சியாக கையொப்பம் செய்யும்போது அந்த நபரின் பெயர், தகப்பனார் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடபடும் என்றால் சரிதான். அவ்வாறு முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொன்ன சொத்து விவரம் மற்றும்

சாட்சிகள் விவரம் தவறானது என்றாலும், முத்திரை தாள் விற்பனை செய்த நபரின் பெயரும் தவறானது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணம் வழக்கிற்காக மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்பதால் என்னால் சரியாக சாட்சியம் அளிக்க இயலவில்லை என்றால் சரியல்ல.

15) எந்தெந்த தேதியில், வாதியிடம் தொகை கொடுக்கப்பட்டது என்றால் பல தேதிகளில் ரொக்கமாக கொடுக்கப்பட்டது. யாருடைய வங்கி கணக்கிலிருந்து பணம் எடுக்கப்பட்டது என்றால் என் அப்பாவின் வங்கி கணக்கிலிருந்து எடுக்கப்பட்டது. வங்கி கணக்கிற்கான கணக்கு எண் மற்றும் வங்கி கணக்கு புத்தகம் உள்ளதா என்றால் இல்லை. எந்த வகையில் அவருக்கு பணம் கிடைத்தது என்றால் என் தகப்பனாரின் வருமானம், விவசாய நிலத்திலிருந்து வரக்கூடிய பணம், அவருடைய ஓய்வு ஊதிய தொகை ஆகியவற்றிலிருந்து கிடைக்கப்பெற்றது.

16) என் தகப்பனாருக்கு என்ன வயதிருக்கும் என்றால் அப்போது 58 வயதிருக்கும். எவ்வளவு நிலங்கள் இருந்தது என்றால் 4 வேலி ஆகும். எனது அப்பா பெயரில் மட்டும் அல்ல. வீட்டிலுள்ள மற்ற நபர்கள் பெயரிலும் இருந்தது. எனது அப்பா பெயரில் 4 வேலி நிலம் இல்லை என்றாலும், அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது என் அப்பா பணி ஓய்வு பெறவில்லை என்றாலும் சரியல்ல.

16) அப்போது அரசாங்கத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட 58 கிலோ நெல் மூட்டையில் விலை 60 ரூபாய் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என் தந்தையார் மற்றும் என் சகோதரர்களுக்கு அந்த அளவுக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட பி.சா.ஆ.2 ஆவணம் கிரைய சாசனம் ஆகும். மேற்படி கிரைய சாசனம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் கடந்த 30.08.1996 ஆகும். எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை.

18) மொத்தம் எத்தனை பேப்பரில் எழுதப்பட்டது என்றால் 3 அல்லது 4 இருக்கலாம். விலை நிர்யணம் செய்ததது 3,09,400/- ஆகும். மேற்படி ஆவணத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வாதி தங்கமணி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.ஒரு ஆவணம் முத்திரை தாளில் எழுதப்பட்டிருந்தால் அந்த ஆவணம் எழுதப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள்ளா கட்டாய பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.120 நாட்களுக்குள் பதிவு செய்யலாம்.

19) வாதிக்கு கிரைய சாசனம் செய்துக்கொடுப்பதற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரக்கோரி அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

நேரில் சென்று வாய்மொழியாக சொன்னேன். வாய்மொழியாக கேட்டபோது வந்து பதிவு செய்து தருகிறேன் என்று சொல்லி காலம் கடத்தி வந்தார். அதற்கு பின்னிட்டு எழுத்து மூலமாக அறிவிப்பு அனுப்பி வாதி பணம் பெற்றுக்கொண்டு விட்டதால் கிரையம் செய்து கொடுக்க சொல்லி அனுப்பினேனா என்றால் இல்லை.

20) ஒரு சொத்தை பொறுத்து சொத்தின் மதிப்பு ரூ.100 என்றால் எவ்வளவு ரூபாய்க்கு முத்திரை தாள் வாங்க வேண்டும் என்றால் 12 சதவீதம் வாங்கவேண்டும். தாவா சொத்தின் மதிப்பு 3,09,400/- ரூபாய்க்கு எத்தனை ரூபாய் முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. மீதித்தொகையை சார்பதிவாளர் அலுவலகத்தில் செலுத்தினேன். எவ்வளவு தொகை சார்பதிவாளர் அலுவலகத்தில் செலுத்தினேன் என்றாலும், எவ்வளவு தொகைக்கு இந்த பத்திரம் செலுத்தினேன் என்றால் ஞாபகமில்லை. 3 பத்து ரூபாய் முத்திரை தாளில் கிரைய பத்திரம் எழுதப்பட்டது. அரசாங்கம் நிர்யணம் செய்த முத்திரை தாளில் கிரைய பத்திரம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.08 19:11:56 +0530

District Munsif

Mannargudi.